

# உழவர் துணைவன்

## ICAR - வேளாண்மை அறிவியல் மையம், கிருஷ்ணகிரி.

Quarterly II, July-September 2017

அன்பார்ந்த வேளாண் பெருமக்களே !

வணக்கம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் இந்த வேளாண்மை அறிவியல் நிலையமானது வேளாண்மையில் நவீன தொழில் நுட்பங்களை கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பெருமக்களுக்கு அளிப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது. பருவங்களுக்கு ஏற்ற பயிர் சாகுபடித் தொழில் நுட்பங்களைப் பற்றிய வயல்வெளி ஆய்வுகள் மற்றும் செயல் விளக்கத்திடல்களை, வேளாண் பெருமக்களின் பண்ணைகளில் செயல்படுத்தி வருவதோடு அதற்குரிய பயிற்சிகளை வேளாண் பெருமக்களுக்கும், வயல்வெளி ஆய்வு முடிவுகள் மற்றும் செயல்விளக்க திடல்களின் முடிவுகளை வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சிகள் மூலம் வழங்கி வருகிறது, மேலும் இதர சார்பு துறைகளுடன் இணைந்து விரிவாக்க நிகழ்வுகளையும் நடத்தி வருகிறது, அதை பற்றிய விவரங்கள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன.

அன்புடன்
S. ரமேஷ், B.A., L.L.B.,
சிறப்பு ஆசிரியர்

## வயல்வெளி ஆய்வுகள்



**தட்டைப்பயிறு இரகம் மதிப்பிடுதல்:** காவேரிபட்டிணம் வட்டம், ஜெகதாப் கிராமத்தில் தட்டைப்பயிறு இரகத்தினை மதிப்பிடுதல் பற்றிய வயல்வெளி ஆய்வினை 5 விவசாயிகளின் நிலங்களில் ஒரு ஹெக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டது. இதில் பங்கேற்றுள்ள விவசாயிகளுக்கு தட்டைப்பயிறு இரகம் IT 38956 விதைகள் மற்றும் TNAU பயறு ஒண்டர் வழங்கப்பட்டது. மேலும் மண் பரிசோதனைக்காக மண் மாதிரி எடுக்கும் முறை, விதைநேர்த்தி செய்யும் முறை, மற்றும் பயறு ஒண்டர் தெளிக்கும் முறை பற்றிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இவ்வயல்வெளி ஆய்வில் IT 38956 இரகத்தினை விவசாயிகள் பயிரிடும் நாட்டு இரகத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

## முதன்மை செயல் விளக்கத்திடல்



**கம்பு கோ 10 :** வேப்பனப்பள்ளி வட்டம், விருப்பசந்திரம் கிராமத்தில் கம்பு கோ-10 இரகத்தை பிரபலப்படுத்த முதன்மை செயல்விளக்கத்திடல் அமைத்து செயல்படுத்தி வந்தது. இச்செயல் விளக்கத்தின் வயல்தினவிழா 18.09.17 அன்று விருப்பசந்திரம் கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேப்பனப்பள்ளி வேளாண் அலுவலர்கள் மற்றும் கம்பு பயிரிடும் அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டனர். இதில் பின்பற்றப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதன் முடிவுகள்

| | கோ-10 | நாட்டு இரகங்கள் |
|---|---|---|
| ஒரு கதிரின் உயரம் | : 30-35 செமீ | 6-10 செமீ |
| ஒரு கதிரின் எடை | : 110-136 கிராம் | 30-40 கிராம் |
| மகசூல் (மானாவாரி ஏக்கருக்கு) | : 1,500 கிலோ | 400-500 கிலோ |



**இராகி ML 365 :** தளி வட்டாரம், சென்னமாலம் கிராமத்தில் இராகி எம்.எல். 365 இரகத்தினை பிரபலப்படுத்தும் முதன்மை செயல் விளக்கத்திடலினை 15 விவசாயிகளின் நிலங்களில் மானாவாரி பயிராக 6 எக்டேர் பரப்பளவில் அமைத்துள்ளது. இச் செயல்விளக்கத்தில் பங்கேற்றுள்ள விவசாயிகளுக்கு இடுபொருட்களான விதை மற்றும் உயிர் உரங்களை கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணைஇயக்குநர் அவர்கள் வழங்கினார். இராகி சாகுபடிக்கு தேவையான உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்களை தொழில்நுட்ப வல்லுநர்கள் எடுத்துரைத்தனர்.





## முதன்மை செயல்விளக்க திடல்



**நெல்லில் TKM 13 இரகம்:** காவேரிப்பட்டிணம் வட்டம், பண்ணந்தூர் கிராமத்தில் TKM 13 என்ற புதிய நெல் இரகத்தினை பிரபலப்படுத்தும் செயல்விளக்கத்திடல் 10 விவசாயிகளின் நிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்செயல் விளக்கத்திடலில் பங்கேற்றுள்ள 10 விவசாயிகளுக்கு நெல் இரகம் TKM 13 விதைகள், ஜிங்க் சல்பேட் மற்றும் சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ் வழங்கப்பட்டது. விதைகளை மேட்டு பாத்தி அமைத்து நாற்றாங்கால் தயார்படுத்தவும், சூடோமோனாஸ் கரைசலில் நாற்றுக்களை நனைத்து 25 செமீ வரிசை இடைவெளியில் நாற்றுகளை நடவும், நடவு செய்தப்பின் ஜிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ போடவும், கோனோ வீடர் மூலம் 20 மற்றும் 40 ஆம் நாட்களில் களையெடுத்தல் பற்றியும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் பரிந்துரைக்கப்பட்ட உரஅளவு மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் மட்டுமே பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது. மேலும் சூரிய ஒளியில் இயங்கும் விளக்குப்பொறி மூலம் பூச்சிகளின் நடமாட்டம் மற்றும் கட்டுப்படுத்தும் முறை பற்றியும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.



**கனகாம்பரம் – அர்கா அம்பாரா இரகம்:** அதிக மகசூல் அளிக்கும் கனகாம்பரம் – அர்கா அம்பாரா இரகத்தினை பிரபலப்படுத்தும் முதன்மை செயல்விளக்கத்திடலானது பர்கூர் வட்டம், கீழ்பூங்குருத்தி கிராமத்தில் 5 விவசாயிகளின் நிலங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இச்செயல் விளக்கத்தில் பங்கேற்றுள்ள விவசாயிகளுக்கு கனகாம்பரம் – அர்கா அம்பாரா இரக நாற்றுக்கள் வழங்கப்பட்டு ஒருங்கிணைந்த பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்பட்டது.



**வீரிய கலப்புத் தீவனப்பயிர்:** காவேரிப்பட்டிணம் வட்டம், ஜெகதாப் கிராமத்தில் அதிக மகசூல் தரும் வீரிய கலப்புத்தீவனம் பயிர் இரகங்களை பிரபலப்படுத்தும் முதன்மை செயல்விளக்கத்திடல் 15 விவசாயிகளின் நிலங்களில் செயல்படுத்துப்பட்டுள்ளது. இதில் கம்பு நேப்பியர் – கோ 5 விதைக்கரணை, தீவனச்சோளம் கோ 31, வேலிமசால் மற்றும் தீவனத்தட்டைப்பயிறு கோ 9 போன்ற வீரிய கலப்புத்தீவன பயிர்கள் தரப்பட்டது. மேலும் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

## தொகுப்பு முதன்மை செயல் விளக்கத்திடல்கள்





**1) சிறப்பு செயல் விளக்கத்திடல்கள்:** தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் (NFSM) கீழ் துவரையில் தொகுப்பு செயல்விளக்கத்திடலானது சூளகிரி வட்டம், குருபரப்பள்ளி மற்றும் குடிசாதனப்பள்ளி கிராமத்தில் 20 எக்டேர் பரப்பில் 50 விவசாயிகளின் நிலங்களில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இச்செயல்விளக்கத்திடலில் பங்கேற்றுள்ள விவசாயிகளுக்கு துவரை இரகம் BRG 2 மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்பட்டது. 13.07.2017 அன்று நடைபெற்ற பயிற்சியில் உயிர் உரங்களை கொண்டு விதைநேர்த்தி செய்யும் முறை, மண்மாதிரி எடுக்கும் முறை மற்றும் பயிர் காப்பீடு திட்டம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. உயிர் உரங்கள் மூலம் விதைநேர்த்தி செய்யும் முறையினை முனைவர் சுந்தர்ராஜ் அவர்கள் செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். இந்நிகழ்ச்சியில் சூளகிரி வட்டாரத்தின் வேளாண் உதவி இயக்குநர் திரு. விஸ்வநாத ரெட்டி கலந்து கொண்டு துவரை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார்.





**2) சிறப்பு செயல் விளக்கத்திடல்கள்:** தேசிய எண்ணெய் வித்துப்பயிர்கள் மற்றும் எண்ணெய்பனைத்திட்டத்தின் (NMOOP) கீழ் நிலக்கடலையில் தொகுப்பு செயல்விளக்கத் திடலானது வேப்பனப்பள்ளி வட்டம், பண்ணப்பள்ளி, மேட்டுப்பாளையம் மற்றும் விருப்பச்சந்திரம் கிராமத்தொகுப்புகளின் கீழ் 75 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 30 எக்டர் பரப்பில் அமைக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் 31.07.2017 அன்று நிலக்கடலை (TCGS 1043 – தரணி) விதையானது வழங்கப்பட்டது. மேலும் மண்மாதிரி சேகரிக்கும் முறை, விதைநேர்த்தி செய்யும் முறை, நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பகள் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை பற்றிய விளக்கங்களை பயிற்சியின் வாயிலாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நிலக்கடலை சாகுபடியில் உரமேலாண்மை பற்றி தொழில்நுட்ப வல்லுநர் திரு. குணசேகர் அவர்கள் விளக்கமளித்தார். பூஞ்சாணம் மற்றும் நோய் மேலாண்மை பற்றி வேளாண்மை அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர். சுந்தர்ராஜ் எடுத்துரைத்தார்.

## விரிவாக்க பணிகள்



### சபதம் மூலம் சாதிப்போம்

30.08.2017 அன்று கிருஷ்ணகிரியில் பிரதமரின் சபதம் மூலம் சாதிப்போம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **அசோக்குமார்** அவர்கள் தலைமை உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மைத்துறை, கால்நடைத் துறை, தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் மற்றும் நபார்டு வங்கி பொதுமேலாளர் கலந்துக்கொண்டு **சபதம் மூலம் சாதிப்போம்** என்பதன் விளக்கத்தையும், நாம் அடைய வேண்டிய இலக்கையும் எடுத்துரைத்தனர். தேசிய வேளாண் பூச்சிகள் மூலாதார அமைவகம், பெங்களூருவை சேர்ந்த முதன்மை விஞ்ஞானி மற்றும் வேளாண் அறிவியல் மையத்தினை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் தொழில்நுட்ப உரையாற்றினர். மேலும் விவசாயிகள் கண்டு பயனுற விவசாயப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இவ்விழாவில் 600க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### உலக தேனீ தினம் மற்றும் தென்னை சாகுபடி கருத்தரங்கம்





காவேரிப்பட்டிணம் வட்டம் அரசம்பட்டி கிராமத்தில் 19.08.2017 அன்று உலக தேனீ தினம் மற்றும் தென்னை சாகுபடி கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெங்களூரு, தேசிய வேளாண் பூச்சிகள் மூலாதார அமைவகத்தை சார்ந்த முதன்மை விஞ்ஞானி முனைவர் சுபாகரன் தென்னையினை தாக்கும் நோய் மற்றும் பூச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்றும் முதன்மை விஞ்ஞானி முனைவர் மோகன் தேனீ வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் தேன் சேகரிக்கும் முறை பற்றி எடுத்துரைத்தனர். மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூரை சார்ந்த பயிர் நோயியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஆனந்த் தென்னை சாகுபடியில் கடைபிடிக்கவேண்டிய புதிய தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கி கூறினார். இந்நிகழ்ச்சியில் அரசம்பட்டி தென்னை வளர்ப்பு குழுவினை சார்ந்த 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டுபயனடைந்தனர்.



### பார்த்தீனிய விழிப்புணர்வு வாரம்

வேளாண்மை அறிவியல் மையம் சார்பில் பார்த்தீனிய ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் ஆகஸ்ட் 16 முதல் 22 வரை கடைபிடிக்கப்பட்டது. இதன் ஒரு நிகழ்வாக சிங்கசாதனபள்ளி கிராமத்தில் 17.08.17 அன்று பார்த்தீனியம் ஒழிப்பு முறை பற்றிய பயிற்சி மற்றும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 40 விவசாயிகள் கலந்துகொண்டனர். மேலும் ஆகஸ்ட் 18 ஆம் தேதி மகாராஜக்கடை அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பார்த்தீனிய ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது.

### தூய்மை இந்தியா இயக்கம்



தூய்மை இந்தியா இயக்கம் விழிப்புணர்வு நிகழ்ச்சி வேளாண்மை அறிவியல் மையத்தால் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் கீழ் 17.09.17 அன்று நமது மையத்தின் அனைத்து அலுவலர்களும் தூய்மை இந்தியா இயக்கத்தின் சபதம் எடுத்து, பின்பு அலுவலகத்தினை சுத்தம் செய்தனர். 19.09.17 அன்று தூய்மை இந்தியா பற்றிய விழிப்புணர்வு பயிற்சி கல்லூரி மாணவர்களிடையே நடத்தப்பட்டது. 24.09.17 அன்று மகாராஜக்கடை கிராமத்தில் கழிப்பறையின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் 25.09.17 அன்று பொது இடங்களில் தூய்மையின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது.

## பிறநிறுவன நிதியுதவி பயிற்சி

### தொழில்நுட்ப பயிற்சி



நபார்டு வங்கி, கிருஷ்ணகிரி நிதியுதவியுடன் சுயஉதவி குழுப்பெண்களுக்கு வேளாண் அறிவியல் மையத்தில் **பழங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல், காய்கறிகள் பதப்படுத்துதல், சூரிய உலர்ப்பானை பயன்படுத்தி இலைக்காய்கறிகள், கீரைகள் பதப்படுத்துதல் மற்றும் மசாலாப்பொடி வகைகள்** தயாரித்தல் என்ற நான்கு தலைப்புகளில் தொழில்முனைவோர் பயிற்சிகள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சியிலும் 20 மகளிர் கொண்ட குழுவிற்கு, 5 நாட்கள் செயல்விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

## நிலையப்பயிற்சிகள்

வேளாண்மை அறிவியல் மையத்தில் சிறுதானியப்பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தீவனப்பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள், நிலக்கடலையில் நுண்ணூட்டச்சத்து மேலாண்மை, துவரையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, இயற்கை வேளாண்மை, வாழையில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டது. இக்காலாண்டில் 12 பயிற்சிகளின் மூலம் 167 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் மதிப்பூட்டப்பட்ட உணவுபொருட்கள் தயாரித்தல் என்ற தலைப்பில் 2 நாட்கள் பயிற்சி சுயஉதவிக்குழு மகளிருக்கு அளிக்கப்பட்டது.



## களப்பயிற்சிகள்



இயற்கை வேளாண்மை, கேழ்வரகு சாகுபடி தொழில் நுட்பங்கள், காய்கறி பயிர்களில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள், பயறுவகை பயிரில் ஒருங்கிணைந்த உரமேலாண்மை, கலப்பு தீவனப்பயிர்கள் மற்றும் சொட்டுநீர் பாசனமுறையும் பராமரிப்பும் போன்ற தலைப்புகளில் 13 பயிற்சிகள் 279 விவசாயிகள் மற்றும் சுயஉதவிக்குழு மகளிருக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிகள் சென்னமலம், டீ.பாராந்தூர், கூர்சனப்பள்ளி, மாதேப்பட்டி, ஜெகதாப் மற்றும் விருப்பச்சந்திரம் போன்ற கிராமங்களில் நடைபெற்றது.

## விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி

10.08.17 அன்று காய்கறியில் அறுவடை பின்சார்ந்த தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பிலும், 12.09.17 அன்று சாகுபடி சூழ்நிலை மாற்றத்தின் மூலம் பூச்சி நிர்வாகம் என்ற தலைப்பிலும், 14.09.17 அன்று தோட்டக்கலைப்பயிரில் இயற்கை விவசாயம் என்ற தலைப்பிலும் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் 78 அலுவலர்கள் கலந்துக்கொண்டு பயனடைந்தனர்.



## விவசாயிகளின் வருகை

அட்மா திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம் வேளாண்மை துறை சார்பில் கண்டுணர் சுற்றுலாவாக வேளாண் அறிவியல் மையத்திற்கு 13.09.17 அன்று 43 விவசாயிகளும், 25.09.17 அன்று 50 விவசாயிகளும் வருகை புரிந்துள்ளனர். மாவில் அடர்நடவு, பரண் மேல் ஆடு வளர்ப்பு போன்ற மாதிரி பண்ணைகளை பார்வையிட்டு பயனடைந்தனர்.






மாவில் அதிக மகசூல், நிறைந்த தரம் மற்றும் அதிக நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றினைப் பெற சரிவிகித ஊட்டச்சத்து மேலாண்மை மிகமுக்கியம். சரிவிகித ஊட்டச்சத்து மேலாண்மையில் நுண்ணூட்டச்சத்துக்களின் பங்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும். நுண்ணூட்டச்சத்துக்களின் குறைபாடுகளிலிருந்து நிவர்த்தி பெற இலைவழி தெளிப்பு மிகவும் பயனுள்ள முறையாகும். இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திடமிருந்து உரிமம் பெற்று இவ்வேளாண்மை அறிவியல் மையத்தால் விற்கப்படும் மேங்கோ ஸ்பெஷல் இலைவழி ஊட்டச்சத்துக் கலவையை வருடத்திற்கு நான்கு முறை மாவிற்கு (இரண்டு முறை பூ பிடிப்பதற்கு முன்பாகவும், காய் பிடித்தப்பின் இரண்டு முறையும்) 0.5 சதவீதம் என்ற முறையில் தெளிப்பதன் மூலம் விவசாயிகள் 20 முதல் 25 சதவீத அதிக மகசூல் பெற்று பயனடையலாம்.

## விற்பனைக்கு....

1) மேங்கோ ஸ்பெஷல் ரூ. 180/கிலோ
2) மா பழ ஈ இனக்கவர்ச்சிப்பொறி ரூ.80/பொறி
3) காய்கறி, பழ நாற்றுக்கள் மற்றும் தீவன பயிர் விதைகள்/கரணைகள் முன்பதிவின் பேரில் கிடைக்கும்
   மற்றும்
4) சிறுதானிய சத்துமாவு ரூ.200/கிலோ

## தொகுப்பு

| | |
|---|---|
| முனைவர். T. சுந்தர்ராஜ் | முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் |
| திரு. T.I. ரமேஷ்பாபு | தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை) |
| திரு. K. குணசேகர் | தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்) |
| திரு. S. செந்தில்குமார் | தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்) |
| மருத்துவர். S. ரமேஷ் | தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்) |
| திருமதி. S. பூமதி | தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்) |
| திரு. S. முகமது இஸ்மாயில் | திட்ட உதவியாளர் |
| திரு. S. கார்த்திகேயன் | பண்ணை மேலாளர் |

ICAR-KVK Krishnagiri E-Newsletter Quarterly

This E-Newsletter is available at http://www.krishnagirikvk.org

பெறுநர்:
திரு ..............................................................
..............................................................
..............................................................